# திருக்குறளின் வீட்டுப்பால் திருவருட்பயன்

என். சுபராஜ்

**திருக்குறளும், திருவருட்பயனும்:**
இரு வரிகளில் இமாலயச் சிந்தனைகளைக் கொட்டித் தீர்க்கும் இலக்கியம் உலகப் பொதுமறையாம் திருக்குறளாகும். வள்ளுவரின் ஆழ்ந்த சிந்தனைகளை வெளிக்காட்டக் கூடிய இந்நூல் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்புமிக்கதோர் வடிவமாகவும் திகழ்கின்றது. மிகச்சிறந்த பகுப்பு, அதிகார வைப்புமுறை, பொருத்தப்பாடு என்பன அமையப்பெற்றது இந்நூல். இந்தியர்களுடைய முழு மனத்தையும் கருத்தையும் கவர்ந்த புத்தகங்கள் இரண்டு. அவைகளில் ஒன்று வட இந்தியர்கள் யாவர்க்கும் தெரிந்த துளசிதாசர் இராமாயணம், மற்றொன்று தீபகற்பமாகிய தென்னிந்தியாவில் யாவர்க்கும் தெரிந்த குறள் என Ferederick Pincott அவர்கள் திருக்குறளைச் சிறப்பித்து மொழிகின்றார்.

திருக்குறளின் காலம் பற்றி பல கருத்து வேறுபாடுகள் ஆய்வாளர்கள் மத்தியில் காணப்படுகின்றன. திரு. வையாபுரிப்பிள்ளை அவர்கள் கி.பி. 450இல் இது தோற்றம் பெற்றிருக்கலாம் எனக்கணிக்கின்றார். காலத்தின் தேவையை அல்லது போக்கை இலக்கியங்கள் காட்டி நிற்பதால் அவர் வரையறை செய்தமை பெரும்பாலும் பொருத்தமுடையதென கூற முடிகின்றது. 1330 குறள்களையும் மூன்று பாலினுள் அடக்கியுள்ளார் வள்ளுவப் பெருந்தகை. இந்நூலின் பெரும்பிரிவு பால் எனவும், சிறுபிரிவு இயல் எனவும், அதனிலும் சிறுபிரிவு அதிகாரம் எனவும் காட்டுவர். இந்த ஒவ்வொரு அதிகாரத்தினுள்ளும் பத்துப்பத்து குறள்கள் உள்ளன. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பால்களை இது கொண்டது. அறத்துப்பால் 38 அதிகாரங்களையும், பொருட்பால் 75 அதிகாரங்களையும், காமத்துப்பால் 25 அதிகாரங்களையும் கொண்டது. மொத்தமாக 133 அதிகாரங்கள் இதில் உள்ளன.

முப்பாலின் தன்மையை விளக்கி நிற்கும் இத்திருக்குறள் வாழ்வின் உறுதிப் பொருட்கள் என வர்ணிக்கப்படும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றுள் ஏனோ வீடு பற்றியும், அதன் தன்மை, நிலைகள் என்பன பற்றியும் தனித்து விளக்குவதற்கு முனையவில்லை. அப்படிப்பார்த்தால் அவர் உலகாயுதம் பற்றிச் சிந்தித்தார் எனக் கொள்ளலாமா? அவ்வாறு ஒருபோதும் இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அவர் இறை சிந்தனை, கன்மம், வீடுபேறு என்பன பற்றி சில அதிகாரங்களில் குறிப்பிட்டுச் சென்றுள்ளார். ஆனால் அவர் திரிவர்க்கத்திற்கு கொடுத்த முக்கியத்துவத்தை அல்லது தனித்துவத்தை வீடுபேற்றுக்கு கொடுக்கவில்லை என்பது மட்டும் தெளிவு.

திருவள்ளுவரின் இந்த வீட்டுப்பால் நிராகரிப்பை சித்தாந்த அட்டகத்தின் ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியார் தன் திருவருட்பயனில் பூர்த்தி செய்துள்ளார் எனத் தோன்றுகின்றது. திருக்குறள் போன்ற இலக்கிய வடிவமைப்பையும், அதிகார வைப்பு முறைகளையும் கொண்ட மற்றுமோர் நூல் இதுவாகும். இந்நூல் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களுள் ஒன்றாகும். திருமுறைகளிலிருந்து எடுத்த சாத்திர உண்மைகளை விளக்கிக் கூறி இறைவன் திருவருளாகிய பயனை உயிர்கள் பெறத் தெளிவாக வழிவகைகளை எடுத்துக் கூறும் நூல் ஆதலின் இது திருவருட்பயன் என்னும் பெயருடையதாயிற்று. 14ம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாக கருதப்படும் இந்நூலை காப்புச் செய்யுள் தவிர்ந்து 10 அதிகாரங்களில் பத்துப்பத்து குறள்களாக வகுத்து வழங்கியுள்ளார் உமாபதிச்சிவாச்சாரியார்.

முப்பாலை திருவள்ளுவர் தர இறுதிப்பாலாகிய வீட்டுப்பாலை இவர் தர முயல்கின்றார் போலத் தெரிகின்றது. பத்து அதிகாரங்கள், அதிகாரத்திற்கு பத்துப்பாக்கள் என்கிற விதத்தில் அமைந்தது திருவருட்பயன். திருக்குறள் போலவே அமைந்திருப்பதால் இதனை வீட்டு நெறிப்பால் என்று குறிப்பிடுவார்கள். திருவருளின் பயனாகிய வீட்டுப்பேற்றை முன்னிலைப்படுத்திகின்றது இச்சாத்திரம். திருக்குறளில் குறிப்பாக வீடு பற்றிக் கூறினாலும் திருவருட்பயன் வீட்டைப்பற்றியே கூறுகின்றது. ஆதலின் இதனை வீட்டுப்பால் என்று கூறும் வழக்கமும் உண்டு.

திருக்குறள் அறநூல்களில் ஒன்றாக முன்னிலைப்படுத்தப்பட திருவருட்பயன் சாத்திர நூலாக முன்னிலைப்படுத்தப்படுகின்றது. எனினும் குறளினுடைய சுருக்கமான அமைப்பு, பெரிய வாக்கியங்களின் அதிபன் (Master of words) ஆகிய வள்ளுவரின் சொற்களை சாத்திரம் போல் கருதும்படி செய்கின்றது என்ற G.U. Pope அவர்களின் கூற்று இங்கு நோக்கத்தக்கது. இவ்வடிப்படையில் நோக்கும் போது புருடார்த்த நெறிகளை நான்கு பாலில் இவ்விருவரும் சேர்த்து விளக்கியுள்ளனர் என்பது தெளிவு.

திருவள்ளுவரின் அறத்துப்பால் பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழ் இயல், எனும் 4 இயல்களைக் கொண்டது. பொருட்பால் அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் எனும் 7 இயல்களையும், காமத்துப்பால் களவியல், கற்பியல் எனும் இரு இயல்களையும் கொண்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக திருவருட்பயன் பத்து அதிகாரங்களில் வீட்டுநெறி பற்றி எடுத்துரைக்கின்றது எனக் கொள்ளலாம்.

பழந்தமிழ் நூல்கள் எழுந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கி இந்நாள் வரையிலும், தோன்றிய இலக்கிய நூல்களையும், பிற நூல்களையும் நூற்றாண்டு வாரியாக எடுத்துக் கொண்டு பார்ப்போமானால் எல்லாக் கால நூல்களிலும் பெரும்பாலும் திருக்குறளின் ஊடுருவலைக் காணலாம் என "திருக்குறள் - ஆய்வும் மதிப்பீடும்" எனும் நூலில் கு.மோகனராசு அவர்கள் குறிப்பிடுகின்றார். முப்பாலை சீரிய முறையில் வெளிக்காட்டிய வள்ளுவரினால் காட்டப்படாத வீட்டுப்பாலை சித்தாந்த கொள்கைகளில் இருந்து சற்றும் விலகாமல் காட்டுகின்றார் உமாபதி சிவாச்சாரியார். மோகனராசு அவர்களின் கருத்துப்படி திருவருட்பயன் இந்த அடிப்படையில் திருக்குறளில் ஊடுருவி இருக்கலாமென ஊகிக்க முடிகின்றது.

**திருக்குறளில் சைவசித்தாந்தச் சிந்தனைகள்:**
மனித வாழ்க்கையின் இன்றியமையா அறச்சிந்தனைகளைக் காலத்திற்கேற்ற வகையில் தந்த வள்ளுவரின் குறட்பா மெய்யியல் நோக்கில் ஆராயப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. சடம் எனப்படும் அறிவில்லாத உலகத்திற்கு மாத்திரமின்றி உயிர்களின் இயக்கத்திற்கும் இறைவன் இன்றியமையாதவன் என்பது முதற் குறளில் கூறப்பட்டுள்ள உவமையால் விளங்கும்.

"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவான் முதற்றே உலகு" (குறள் 01)

கடவுளின் சிறப்பியல்பு இதில் பேசப்படுகின்றது. எல்லா மெய்யெழுத்துக்களுக்கும் அடிநிலையாக இயங்கும் அகரத்தைப் போல் உலகத்தோற்றத்திற்கு முதலாக இறைவன் உள்ளான். சிவஞானபோதமும் இதனைச் சுட்டிக்காட்டுகின்றது.

"அவன் அவள் அது எனும் மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி அந்தம்
ஆதி என்மனார் புலவர்"
(சூத்.01, அதி.01)

"அக்கரங்கள் இன்றாம் அகர உயிர் இன்றேல்........"
(சூத்.02, அதி.01)

இதனையே உமாபதி சிவாச்சாரியார் இவ்வாறு சுட்டுகின்றார்.
"அகர உயிர் போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து"

தடத்த இலக்கணத்தில் இறைவன் எண்குணங்களை உடையவன் என்பதை,
"கோளிற் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத்தலை" என்கிறது திருக்குறள்.

இறைவன் உணர்தற்குரியவன் எனும் சித்தாந்தத் தத்துவத்தையே,
"சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மாற்றழித்து
சார்தரா சார்தரு நோய்" (குறள் 359)
எனும் குறளின் ஊடாக இறைவன் உணர்வதற்குரியவன் எனக் காட்டுகின்றார் திருவள்ளுவர். ஆன்மாக்களின் இருப்பை ஏற்றுக்கொள்ளும் வள்ளுவர் அவற்றின் ஊழ், மறுமை என்பன பற்றியும் குறித்துச் செல்கின்றார். இதனை,
"ஊழிற்பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்"

"தன்னுயிர் தான் அறப்பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்" (குறள் 268)

ஆகிய குறள்களினூடே அறியலாம்.

திருவருட்பயனில் வீட்டு நெறி:
வீட்டுநெறி என்பது சாதனநெறிகளைப் பின்பற்றி, உடலைச் சுற்றியிருக்கும் மலங்களை நீக்கி, மெய்ப்பொருளாகிய இறைவனை அடைதலே ஆகும். எனவே வீட்டுநெறியை வெளிக்காட்ட வேண்டுமாயின் இறை, ஆன்மா, பாசம், சாதனங்கள் என்பனவற்றையும் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும். இந்த அடிப்படையில் திருவருட்பயன் முதலாவது அதிகாரத்தில் (பதிமுதுநிலை) இறைவனின் தன்மை பற்றி விபரிக்கின்றது.

"பல்லாருயிர் உணரும் பாண்மையென மேலொருவன்
இல்லாதான் எங்கள் இறை"

அதாவது ஆன்மாக்கள் எல்லாவற்றாலும் இறைவனின் நிலையை உணரமுடியாது. சில ஆன்மாக்களே இதற்கு தகுதி பெறுகின்றன என்கிறது இக்குறட்பா. தொடர்ந்து இரண்டாவது அதிகாரத்தில் (உயிரவைநிலை) ஆன்மாவின் நிலை பற்றி பேசப்படுகின்றது. ஆன்மாக்கள் பிறந்தும் இறந்தும் துன்பம் அடைந்தும் கொண்டேயிருக்கின்றன என்பதை,

"அன்றாடும் ஆற்றும் உயிர் அந்தோ அருள் தெரிவ
என்று அளவொன்றில்லா இடர்"

எனும் குறள் ஊடாக காட்டுகின்றது திருவருட்பயன். மூன்றாவது அதிகாரத்தில் (இருள்மலநிலை) ஆன்மாவை வீட்டுநெறி அடைய முடியாதவாறு தடுக்கும் இருள்மலமாகிய ஆணவத்தின் தன்மை விளக்கப்பட்டுள்ளது. இருளானது எல்லாப் பொருட்களினதும் தன்மைகளை மறைத்து அப்பொருட்கள் இல்லாத வகையில் காட்டும். அதுபோல் ஆணவம் ஆன்மாவின் தன்மையை மறைக்கின்றது என்பதை,

"இருளானது அன்றி இலது எவையும் ஏகப்
பொருளாகி நிற்கும் பொருள்"

எனும் குறள் குறித்து நிற்கின்றது. நான்காவது அதிகாரத்தில் (அருளதுநிலை) திருவருளின் தன்மையை எடுத்துக்காட்டியுள்ளார் ஆசிரியர். திருவருளை விட பெரியது வேறெதுவுமே இல்லை என்கின்றார் அவர்.

"அருளில் பெரியது அகிலத்தில் வேண்டும்
பொருளில் தலை இலது போல்"

இறைசிந்தனை, உயிர், ஆணவம் என அடுத்தடுத்து தான் கூறவரும் பிரதான கருப்பொருளுக்கேற்றாற் போல் மிகச்சிறப்பாக அதிகார வைப்புக்களை மேற்கொள்ளும் உமாபதி சிவாச்சாரியார் தனது திருவருட்பயனின் ஐந்தாவது அதிகாரத்தில் (அருளுரு நிலை) ஆன்மா வீட்டின்பம் பெறுவதற்குத் துணையாக இறைவன் குருவடிவில் வருவதாக சுட்டிக்காட்டுகின்றார்.

"விடம் நகுலம் மேவினும் மெய்ப்பாவகனின் மீளும்
கடனில் இருள் போவது இவன் கண்"

தொடர்ந்து ஆறாவது அதிகாரம் (அறியும் நெறி), ஏழாவது அதிகாரம் (உயிர்விளக்கம்), எட்டாவது அதிகாரம் (இன்புறு நிலை) என்பன முறையே முத்தியின்பத்தை அறிகின்ற வழிமுறைகள், ஆன்மாக்களின் இருவினை ஒப்பு, வீட்டின்பத்தின் இன்பநிலை என்பன பற்றி விளக்கங்கள் கொடுக்கின்றன.

ஒன்பதாவது அதிகாரத்திலே (ஐந்தெழுத்து அருள்நிலை) வீடு பேறை அடைவதற்கு முக்கிய சாதனமாக இருக்கும் ஐந்தெழுத்து மந்திரத்தின் தன்மையையும், சிறப்பையும் விபரிக்கின்றது. ஐந்தெழுத்திலும் "சிவாயநம" என்பதே வீட்டுப்பேற்றுக்குரியது என்றும் "நமசிவாய" என்பது பற்றை உருவாக்குவது என்றும் சுட்டிக் காட்டுகின்றார் உமாபதி சிவாச்சாரியார்.

"ஆராதி ஆதாரம் அந்தோ அது மீண்டு
பாராது மேல் ஓதும் பற்று"

இறுதியாக பத்தாவது அதிகாரம் (அணைந்தோர் தன்மை) வீடு பேறை அடைந்தோரின் இயல்பை விளக்குகின்றார். ஆமை தன் ஓட்டில் ஐந்துபுலம் அடக்கியது போல அறிவுக்குரிய புலன்களை அடக்கி, ஒடுக்கி தம் முதல்வனாகிய சிவத்துள் புகுந்து இருப்பார்கள் என முத்தர்களின் நிலை பற்றி,

> "புலன் அடக்கி தம்முதற்கண் புக்குறுவர் போதார்
> தலன் நடக்கும் ஆமை தக"

எனும் குறளினூடாக குறித்துக் காட்டுகின்றது திருவருட்பயன். வள்ளுவரின் குறள் புலன்களோடு கூடிய இவ்வுடம்பின் தோற்றமாகிய பிறப்பென்னும் தொழில் நீங்க அது செம்பொருளினை அறிய வேண்டும் என்கிறது. வீடுபேறு ஆன்மாக்களின் உயர்போகம் என்பது சித்தாந்திகள் சிந்தனை.

**நிறைவாக:**

வள்ளுவப் பெருந்தகை ஆன்மாக்கள் அடையும் முத்திப்பேற்றை, அவற்றின் வீட்டின்பத்தை முற்றுமுழுதாக நிராகரிக்கின்றார் என்று கூறமுடியாது. அர்த்தசாத்திரம் பொருளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. காமசூத்திரம் இன்பத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. தர்மசாத்திரங்கள் அறத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. அவ்வாறாயின் இவை ஒவ்வொன்றும் மற்ற அர்த்தத்தினை மறுக்கின்றது எனக் கூறமுடியாது. மாத்திரமின்றி வள்ளுவர் வீட்டு நெறி பற்றி கூறமாலுமில்லை. திருக்குறளின் பாயிரவியல், துறவறவியல் என்பன இதற்குச் சான்றாக அமைகின்றன. ஆனால் திருக்குறள் திரிவர்க்கத்திற்கு கொடுத்த முக்கியத்துவத்தை வீட்டுப்பாலுக்கு கொடுக்கவில்லை என்பது தெளிவு. எனவே திருக்குறள் வீட்டுப் பேற்றினை தனித்து ஒரு பகுதியாகக் காட்டமுடியாத குறையை திருவருட்பயன் தீர்த்து வைக்கின்றது எனக் கூறலாம்.

**பயன்பட்ட நூல்கள்:**


01. அப்பாத்துரையார், கா., 2001, **வள்ளுவர் நிழல்,** தமிழ் மண் பதிப்பகம், சென்னை.
02. காவ்யா சண்முக சுந்தரம், 2007, **திருதிருவள்ளுவர்கள்,** காவ்யா, சென்னை.
03. சங்கரவள்ளி நாயகம், அ., 2005, **புலத்துறை முற்றிய பொய்யியல் புலவர்,** அகரம், தஞ்சாவூர்.
04. சிவபாதசுந்தரம், சு., 1953, **திருவருட்பயன் (விளக்கவுரையுடன்),** இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
05. சுந்தரமூர்த்தி., 1993, **திருவருட்பயன் (தெளிவுரையுடன்),** ஸ்ரீ காசிமடம், திருப்பணந்தாள்.
06. சௌந்தரா கைலாசம், 2001, **குறளமுதம்,** பூம்புகார் பதிப்பகம், சென்னை.
07. மயில்வாகனம்,இரா., 2000, **சைவசித்தாந்த சம்புடம்,** றிச்மண்ட் வரில் ரொறண்டோ, கனடா.
08. மரிய அலெக்சாந்தர் இருதயராசு, அ., 2004, **திருக்குறளும் மனு நெறித் திருநூலும்,** தி பார்க்கர், இராயப்பேட்டை, சென்னை.
09. **மெய்கண்டசாத்திரங்கள்,** 1988, சைவசித்தாந்தத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை
10. முருகன், ப., 1991, **குறள்வழிச் சிந்தனைகள்,** செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடட், சென்னை.
11. மோகனராசு,கு., 1987, **திருக்குறள் ஆய்வும் மதிப்பீடும்,** திருக்குறள் ஆய்வு மையம், சென்னைப் பல்லைக்கழகம்.
12. தமிழரசு, ச., 1998, **வள்ளுவம் ஒரு கவிப்பார்வை,** தமிழாலயம் பதிப்பகம், விழுப்புரம்.
13. தண்டபாணிதேசிகர், ச., 2002, **திருக்குறள் அமைப்பும் அழகும்,** தென்றல் நிலையம், சிதம்பரம்.

# ARTICLE CONTRIBUTORS

**SM. Ahamed Lebbe,**
*Senior Lecturer,*
*Department of Social Sciences,*
*South Eastern University of Sri Lanka.*

**AAM. Nufile,**
*Senior Lecturer,*
*Department of Social Sciences,*
*South Eastern University of Sri Lanka.*

**Mrs. ARS. Jesmy,**
*Lecturer,*
*Department of Social Sciences,*
*South Eastern University of Sri Lanka.*

**MBM. Ismail,**
*Senior Lecturer,*
*Department of Management,*
*South Eastern University of Sri Lanka.*

**A. Ilmudeen,**
*Temp. Asst. Lecturer,*
*Department of Management,*
*South Eastern University of Sri Lanka.*

**Dr. (Ms.) Anuzsiya .S.,**
*Senior Lecturer,*
*Department of Social Sciences,*
*South Eastern University of Sri Lanka.*

**T. Pradeep Kumar,**
*Assistant Professor,*
*Affiliated to Bangalore University,*
*Bangalore,*
*Karnataka,*
*India.*

**K. Kanesarajah,**
*Senior Lecturer,*
*Department of Social Sciences,*
*South Eastern University of Sri Lanka.*

**SM. Aliff,**
*Senior Lecturer,*
*Department of Social Sciences,*
*South Eastern University of Sri Lanka.*

**M. Abdul Jabbar,**
*Senior Lecturer,*
*Department of Social Sciences,*
*South Eastern University of Sri Lanka.*

**MAM. Fowsar,**
*Lecturer,*
*Department of Social Sciences,*
*South Eastern University of Sri Lanka.*

**MIM. Irfan,**
*Temp. Asst. Lecturer,*
*Faculty of Islamic Studies & Arabic Lang.,*
*South Eastern University of Sri Lanka.*

**KMM. Faleel Haque,**
*Senior Lecturer,*
*Department of Social Sciences,*
*South Eastern University of Sri Lanka.*

**SM. Ayoob,**
*Lecturer,*
*Department of Social Sciences,*
*South Eastern University of Sri Lanka.*

**Prof. S. Thillainathan,**
*Emeritus Professor,*
*University of Peradeniya.*

**MA. Mohamed Rameez,**
*Senior Lecturer,*
*Department of Languages,*
*South Eastern University of Sri Lanka.*

**Mrs. MLS. Rahila Ziyad,**
*Senior Lecturer,*
*Department of Languages,*
*South Eastern University of Sri Lanka.*

**K. Raguparan,**
*Senior Lecturer,*
*Department of Languages,*
*South Eastern University of Sri Lanka.*

**AFM. Ashraff,**
*Senior Lecturer,*
*Department of Languages,*
*South Eastern University of Sri Lanka.*

**Mrs. MASF. Saadhiya,**
*Senior Lecturer,*
*Department of Languages,*
*South Eastern University of Sri Lanka.*

**N. Subaraj,**
*Temp. Asst. Lecturer,*
*Department of Languages,*
*South Eastern University of Sri Lanka.*